032074

7 JUN 2007
சென்னை-600 005

சுருக்கம்

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு—உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு— ஈடுகட்டுதல்— ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசாணை (நிலை) எண்.75 — நாள் 1.6.2007

படிக்க:

1) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். 68980/2006/டிபி3, நாள் 26.12.2006

2) சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடித எண். க.& மா.3/9128/2006, நாள் 19.12.2006

3) பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித எண்.20959/2006/இ2, நாள் 4.1.2007.

-----

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.11.2006 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையை ஆய்வு செய்தபோது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

"தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க தமிழக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை அரசு ஈடுகட்டும்" இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கோரிக்கை எண்.10, வணிக வரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத்துறை) இல் ரூ.30.00 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90 : 10 என்ற விகிதத்தில் ரூ.27.00 கோடி மற்றும் ரூ.3.00 கோடி எனப் பகிர்ந்தளிக்கப்படும்

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து, பார்வை 1, 2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்ட கடிதங்களின்படி முறையே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பதாக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு இழப்பு ஆண்டொன்றுக்கு ஏற்படுவதாக தெரிவித்துள்ளார்கள்:-

| | |
|---|---|
| நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) | ரூ.29,32,45,350/– |
| சென்னை மாநகராட்சி | ரூ.10,00,00,000/– |
| பேரூராட்சிகள் | ரூ.1,84,23,000/– |
| மொத்தம் (தோராயமாக) | ரூ.41,16,68,350/– |

மேலும், மேற்படி வருவாய் இழப்பினை நேர் செய்யுமாறு அரசை கோரியுள்ளனர்.

3.தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை சரி செய்வது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்கள் அரசால் நன்கு கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழில் பெயரிடப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் அரசின் முடிவின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டும் வகையில் ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தேழு கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்தொகையினை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு உள்ளாட்சிப் பகுதிகளில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த, சிறப்பான, புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4.அரசாணை (நிலை)எண். 49, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள் 30.3.2007 இல் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனம் (டுபிட்கோ) தனியாக சிறந்த திட்டங்களுக்காக "நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு நிதி" துவக்க வழி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே பத்தி 3–இல் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையான ரூ.27.00 கோடியும் இந்த நிதியில் சேர்க்கப்பட்டு மேலும் ஒரு திட்டமாக தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனத்தால் பராமரிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் அரசிற்கு நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும். அரசு, இவற்றில் தேர்வு செய்யப்பட்ட கருத்துருக்களுக்கோ அல்லது பிற திட்டங்களுக்கோ உரிய அனுமதி வழங்கி, நிதியை விடுக்க தக்க ஆணைகள் வெளியிடும். இதன் பேரில், டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மேற்படி துறைத் தலைவர்களுக்கு உரித்தான தொகையை மேற்படி நிதியிலிருந்து வழங்குவார். டுபிட்கோ இதற்கான பயன்பாட்டு சான்றிதழினை துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இப்பொருள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி டுபிட்கோ காலமுறை அறிக்கையினை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

5. முன் பத்தி 3–ல் ஏற்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்;

3604– 00– உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுக்கும் ஒதுக்கீடுக்கும் –103– கேளிக்கை வரி – 1 திட்டத்தில் சேராதது – 51 இழப்பீடு –02– ஏனைய இழப்பீடு ( DPC 3604–00103– AC 5123).

6. செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்காணும் கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலராக செயல்படுவார்.

7. ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கான ஆணைகள் ஊரக வளர்ச்சித் துறையில் வெளியிடப்படும்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு. 27734/ நிதி (நநிகுவ)/, நாள் 26.5.2007 இசைவின்படி வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–600 009
முதன்மை மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனம், சென்னை.
நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலகம், சென்னை–5
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–108
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–103
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009.
நகல்
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009.
மாண்புமிகு நிதிஅமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின்
தனிச் செயலாளர். சென்னை–600 009.
நிதித் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 600 009.
நிதித் துறை, சென்னை 600 009.
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2/வ/செ)துறை, சென்னை600 009
இ.கோ. / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.